| | | | |
|---|---|---|---|
| EP. 26/2022 | | ம..சா. | தேதி.21.04.2023 |
| பெயர் | திரு. துரைராஜ் | வயது | - |
| த/பெ. | திரு.குழந்தைவேல் | முகவரி | 4/663, அன்னூர் ரோடு, ஜீவானந்தபுரம் |
| வட்டம் | மேட்டுப்பாளையம் | மாவட்டம் | கோயமுத்தூர் |

சாட்சி முன்னிலை உறுதிமொழி எடுக்கப்பட்டது

<u>குறுக்கு விசாரணை</u>

1. இம்மனுவின் மனுதாரர் மெர்ஸி ஸ்டெல்லா என் மனைவி என்றால் சரிதான். எல்லா வாய்தாக்களுக்கும் நான் நீதிமன்றத்திற்கு வருகிறேன் என்றால் சரிதான். போன வாய்தாவில் சாலமன் ராஜாவை குறுக்கு விசாரணை செய்த போது நான் நீதிமன்றத்திற்குள் தான் இருந்தேன் என்றால் சரிதான். வழக்கு விபரம் எல்லாம் எனக்கு தெரியும். சந்திரசேகரன் என் மனைவிக்கெதிராகவும் அவரது சகோதர சகோதரிக்கெதிராகவும் வழக்கு தாக்கல் செய்த விபரம் எனக்கு தெரியும்.. அந்த வழக்கு சந்திரசேகருக்கு சாதகமாக தீர்ப்பான விஷயம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும்.

2. அந்த வழக்கில் நான் சாட்சியாக வரவில்லையென்றால் சரிதான். அந்த வழக்கில் சந்திரசேகருக்கு சாதகமாக தீர்ப்பாகி அதை எதிர்த்து மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டதென்றால் சரிதான். அந்த மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்பட்டதென்றால் சரிதான். அந்த தீர்ப்பிற்கெதிராக சென்னை உயர்நீதிமன்றத்தில் இரண்டாவது மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டதென்றால் சரிதான். மேற்கண்ட அசல் வழக்கிலும் மேல்முறையீட்டிலும் சந்திரசேகருக்கு முத்துசாமி முறைப்படி எழுதிக் கொடுத்துள்ளாரென்றும், அது சட்டப்படி செல்லும் என்றும் தீர்ப்பாகிவிடும். தீர்ப்பாகியுள்ளது அது தவறான தீர்ப்பாகும்.

3. அசல் வழக்கில் எதிருரையில் தாக்கல் செய்துள்ள சங்கதிகளும், எனது முதல் விசாணையில் சொல்லியுள்ள சங்கதிகளும் ஒன்றே தான் என்றால் சரிதான். என் மனைவிக்கு சாதகமாக சாட்சி சொல்ல வந்துள்ளதால் அந்த சாட்சி ஏற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. சந்திரசேகரன் சுவாதீனம் எடுக்கக்கூடாதென மனுதாரர்களுடன் சேர்ந்து நான் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது சாட்சியம்

ஏற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

மேலே கண்ட சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் அவர் கூறியவாறு பதியப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரிடம் கையொப்பம் /கைரேகை பெறப்பட்டது.

ஒப்பம்/-பெ.க.சிவக்குமார்

சார்பு நீதிபதி, மேட்டுப்பாளையம்.